பத்தாம் வகுப்பு – காலாண்டுத்தேர்வு – செப்டம்பர் 2014

சமூக அறிவியல் - குறிப்பு விடைகள்

பிரிவு – 1 பகுதி-1

சரியான விடை

1. அ. 1870
2. அ. பிரான்சிஸ் பெர்டினான்டு
3. ஈ. பங்கு வணிகச் சந்தை
4. அ. பெயிண்டர்
5. அ. மின்னல் போர்
6. அ. தி ஹேக்
7. இ. யூரோ
8. அ. பனி உறைவிடம்
9. அ. பாலை மண்
10. ஆ. பணப்பயிர்
11. இ. ஜாம்ஷெட்பூர்
12. ஆ. அமைதி
13. அ. 18
14. ஆ. 950 டாலர்கள்

பொருத்துக

15.

| | | | |
|---|---|---|---|
| i | அ. இனவெறிக் கொள்கை | - | ஆப்பிரிக்கா |
| | ஆ. வெர்சேல்ஸ் உடன்படிக்கை | - | ஜெர்மனி |
| | இ. கருஞ்சட்டை | - | முசோலினி |
| | ஈ. இராயல் விமானப்படை | - | இங்கிலாந்து |
| | உ. மெயின் காம்ப் | - | எனது போராட்டம் |
| ii | அ. கேரளாவிலுள்ள பெரிய ஏரி | - | வேம்ப நாடு |
| | ஆ. அதிக மழை பெறும் பகுதி | - | மௌசின்ராம், சிரப்புன்ஜி |
| | இ. பழுப்பு நிலக்கரி | - | ஒரு வகை நிலக்கரி |
| | ஈ. ரப்பர் | - | கேரளா |
| | உ. சணல் தொழிலகம் | - | மேற்கு வங்காளம் |

பிரிவு – 2 - சிறு வினாக்கள்

16. ஏகாதிபத்தியம்
    1. ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுகட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.
    2. ஒரு நாடு தன் நாட்டின் ஆட்சியை மற்றொரு நாட்டின் மீது திணித்தல்.
    3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களை கையக்கடுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல்.

17. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்

1. பொதுச்சபை
2. செயலகம்
3. சர்வதேச தொழிலாளர் அமைப்பு
4. நிர்வாக சபை
5. சர்வதேச நீதிமன்றம்

18. பாசிசத்தின் நான்கு தூண்கள்

1. ஒரே தலைமை
2. ஒரே கட்சி ஆட்சி
2. பயங்கர வாதம்
4. பொருளாதார ஆளுமை

19. அழித்து பின் வாங்கும் கொள்கை

1. அழித்து பின் வாங்கும் கொள்கையை பின்பற்றியது இரஷ்யா.
2. அரசு அலுவலகங்கள், பயிர்கள், பாலங்கள், இருப்புப்பாதைகள் போன்றவற்றை ஜெர்மனி கைப்பற்றாமல் இருக்க அவற்றை தாங்களே அழித்துக்கொண்டனர்.
3.

20. ஐ.நா.சபையின் முக்கிய நோக்கங்கள்

1. உலக அரங்கில் அமைதி, பாதுகாப்பு, நட்புறவு, ஒற்றுமை, நல்லிணக்கம் ஏற்படுத்துதல்.
2. சிக்கலுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல்.

21. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன நாடுகள்

1. பெல்ஜியம்
2. பிரான்ஸ்
3. இத்தாலி
3. லக்ஸம்பர்க்
5. நெதர்லாந்து
6. மேற்கு ஜெர்மனி

22. பிரிட்டானியப் போர்

1. ஹிட்லர் பிரிட்டனுக்கு எதிராக லாப்ட் வாப் என்ற வான் தாக்குதலை நடத்தினார்.
2. நீர் மூழ்கிக் கப்பல் மூலம் இங்கிலாந்து கப்பல்கள் பலவற்றை மூழ்கடித்தார்.
3. இங்கிலாந்து சர். வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையில் ஜெர்மனுக்கு எதிராக வான் வழித் தாகுக்குதலை மேற்கொண்டது.

23. பொருளாதாரம் அல்லது வரிக்கட்டுப்பாடு

1. வலிமையான ஒரு நாடு, வலிமை குறைந்த ஒரு நாட்டின் மொத்த அதிகாரங்களை, தன்வசப்படுத்திக் கொள்ளும் செயல்பாடு.
2. உதாரணம் : முதல் உலகப் போருக்கு முன், துருக்கியில் பொருளாதார அமைப்புகள் அனைத்தும் ஆட்டோமன் பொதுக்கடன் நிர்வாகத்தின் கட்டடுப்பாட்டில் இருந்தது.

24. பஞ்ச சீலத்தின் ஐந்து கொள்கைகள்

1. ஒரு நாட்டின் இறையாண்மையை மதித்தல்
2. பிற நாட்டை தாக்கக் கூடாது
3. பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது
4. மற்ற நாடுகளுடன் சமத்துவ பரஸ்பர நல்லுறவு
5. பிற நாட்டுடன் அமைதியான முறையில் நட்புறவு இணக்கம்

25. தமிழ் நாட்டில் உள்ள மாநில கட்சிகள்

1. அதிமுக
2. திமுக
3. தேமுதிக
4. பாமக
5. முஸ்லீம் லீக்
6. மதிமுக

26. மேற்கு கடற்கரை பகுதியில் டெல்டாக்களை அமைக்காத ஆறுகள்
    1. நர்மதை    2. தபதி

27. பருவமழை வெடிப்பு
    1. தென் மேற்கு பருவகாலம் ஆரம்பத்தில், இடி மின்னலுடன் கூடிய மழையை அளிப்பதையே 'பருவமழை வெடிப்பு' என்பர்.
    2. கேரளத்தின் தென் பகுதியை அடையும் போது தென் மேற்கு பருவ காலம் ஆரம்பிக்கிறது.

28. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள்
    1. ஆந்திரபிரதேசம்    2. ஜார்க்கண்ட்    3. பீகார்    4. இராஜஸ்தான்.

29. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
    1. நிலத்தோற்றம்    2. காலநிலை    3. மண்வகை    4. நீர்.

30. சணல் பொருட்கள் யாவை?
    1. சணல் பைகள்    2. கூடாரத்துணி    3. சிப்பப்பைகள்
    4. வலைப்பைகள்    5. கோணிப்பைகள்    6. கெட்டியான துணிகள்

31. இயற்கை வளம் என்றால் என்ன?
    1. அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் பொருட்களை இயற்கை வளங்கள் என்கிறோம்.
    2. எ.கா. சூரியன், காற்று, நீர்

32. ஜெட் காற்று
    1. வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் காணப்படும் காற்றோட்டத்தினை ஜெட் காற்றோட்டம் என்கிறோம்.
    2. இக்காற்றோட்டம் இந்தியாவில் பருவ கால்தின் தொடக்க காலத்தையும், முடிவடையும் பருவ காலத்தையும் நிர்ணயிக்கிறது.

33. இமயமலையின் முக்கியத்துவம்
    1. இந்தியாவின் இயற்கை அரணாக அமைந்துள்ளது.
    2. இமயமலை அந்நிய படையெடுப்பை தடுக்கிறது
    3. வட இந்திய நதிகள் உற்பத்தியாகிறது.
    4. தென் மேற்கு பருவ காற்றினை தடுத்து அதிக மழைப் பொழிவை தருகிறது.

34. தலையிடாக் கொள்கை
    1. அரசு, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.
    2. பொருள்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு போன்றவற்றில் அரசின் தலையீடு இல்லாமல் இருப்பது.

35. நாட்டு வருமானம்
    1. ஒரு நாட்டில் ஓர் ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே நாட்டு வருமானம் ஆகும்.
    2. நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்த வருமானத்தை குறிப்பதாகும்.

பிரிவு – 3 வேறுபாடுகள்

| 36 | கீரின்விச் தீர்க்க நேரம் | இந்திய திட்ட நேரம் |
|---|---|---|
| 1 | 0 இது 0°ஐ குறிககும் | இது 82°30′ ஐ குறிக்கும் |
| 2 | உலகின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது | இந்தியாவின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. |
| 3 | இதன் மையம் லண்டன் | இதன் மையம் அலகாபாத் |

| 37 | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1 | ஓர் இடத்தில் உள்ள வெப்பம் அழுத்தம், காற்று, ஈரப்பதம், மற்றும் மழைப் பொழிவு குறிப்பது | ஓரிடத்தின் நீண்ட நாளைய உண்மையான சராசரி வானிலையைக் குறிப்பது. |
| 2 | அன்றாட நிலையைக் குறிப்பது ஆகும். | இதனை அளவிட 35 வருட கால வானிலை தேவைப்படுகிறது. |
| 3 | தினமும் மாறுபடும் | நீண்ட நாளைக்கு ஒரே மாதிரியாக இருக்கும் |

| 38 | புதுப்பிக்க கூடிய வளங்கள் | புதுப்பிக்க முடியாத வளங்கள் |
|---|---|---|
| 1 | மீண்டும் மீண்டும் புதுப்பிக்க கூடியது | பயன்பாட்டிற்கு பின் மீண்டும் புதுப்பிக்க இயலாது |
| 2 | உ-ம் சூரிய ஒளி, காற்று, நீர் | உ-ம் நிலக்கரி, கச்சா எண்ணெய் |
| 3 | இவை தொடர்ந்து இயற்கையாக கிடைக்கக் கூடியது | இவை தொடர்ந்து கிடைக்காது. |

| 39 | ஒரு பயிர் சாகுபடி | இரு பயிர் சாகுபடி |
|---|---|---|
| 1 | இது ஒரு போகம் எனப்படும் | இது இரு போகம் எனப்படும். |
| 2 | ஒரு பயிர் மட்டுமே விளைவிக்கப்படும் | இரண்டு பயிர்கள் விளைவிக்கப்படும் |
| 3 | எ.கா. தேயிலை, காப்பி, கரும்பு | எ.கா. கோதுமை, கடுகு. |

| 40 | வேளாண் சார்ந்த தொழிலகம் | கனிமம் சார்ந்த தொழிலகம் |
|---|---|---|
| 1 | வேளாண் பொருட்கள் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. | உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்கள் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 2 | மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. | கனிமச் சுரங்கங்களுக்கு அருகில் தொழில்சாலைகள் செயல்படுகின்றன. |
| 3 | எ.கா. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் | எ.கா. இரும்பு எ∴கு தொழிற்சாலைகள் |

| 41 | காற்று சக்தி | அனல் மின் சக்தி |
|---|---|---|
| 1 | புதுப்பிக்க கூடிய சக்தி | புதுப்பிக்க இயலாத சக்தி |
| 2 | காற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது | நிலக்கரி, பெட்ரோலியம் இயற்கை எரிவாயுவிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. |
| 3 | நிறுவ பொருட்செலவு அதிகமாகும் | ஆரம்ப பொருட்செலவி குறைவு |
| 4 | தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், குஜராத் போன்ற பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது | அஸ்ஸாம், ஜார்க்கண்ட், உத்திர பிரதேசம், மேற்கு வங்கத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. |
| **42** | **மலைகளின் காற்று மோதும் பக்கம்** | **காற்று மோதாப் பக்கம்** |
| 1 | காற்று வீசும் திசையை நோக்கியுள்ள மலைச்சரிவை காற்று மோதும் பக்கம் என்கிறோம். | மலைகளின் மறுபக்க சரிவு காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ள பகுதி காற்று மோதாப் பக்கம் என்கிறோம். |
| 2 | அதிக மழையை பெறுகிறது | மழை மறைவு பிரதேசம் |
| **43** | **மேற்கு கடற்கரை சமவெளி** | **கிழக்கு கடற்கரை சமவெளி** |
| 1 | கட்ச் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது | வங்காளத்திலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது |
| 2 | வடக்கே கொங்கன் கடற்கரை அமைந்துள்ளது | வடக்கே வடசர்கார் சமவெளி அமைந்துள்ளது |
| 3 | தெற்கே மலபார் கடற்கரை அமைந்துள்ளது | தெற்கே சோழ மண்டல கடற்கரை அமைந்துள்ளது |
| 4 | மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் காணப்படுகிறது | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் காணப்படுகிறது |
| 5 | இங்கு ஏரிகள், கழிகள் மற்றும் காயல்கள் காணப்படுகின்றன | இச்சமவெளியில் ' சிலிகா ஏரி' 'கொல்வேரு ஏரி' அமைந்துள்ளது. |

பிரிவு – 4 தலைப்பு வினா

44. பிளாசி மற்றும் பக்சார் போர்
  அ) சிராஜ் உத்தௌலா  ஆ) வெல்லெஸ்லி பிரபு
  இ) வாரிசு இழப்புக்கொள்கை  ஈ) கி.பி. 1858
45. முதல் உலகப்போரின் போக்கு
  அ) கி.பி. 1914-18  ஆ) ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும்
  இ) இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும்  ஈ) பீரங்கிப்படை, நீர்மூழ்கிக் கப்பல்கள்
46. ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்
  அ) 1963 - அணுசோதனை தடைச்சட்டம்,
  1996 – தொடர் அணு சோதனை தடைச்சட்டம்
  ஆ) ரியோ-டி-ஜெனிரோ
  இ) அறிக்கை 21
  ஈ) ஐ.நா.தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டு வந்தது

47. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்கள்
  அ) ஐரோப்பிய நாடாளுமன்றம்  ஆ) சட்டங்களை வடிவமைப்பது, சமர்ப்பிப்பது
  இ) லக்ஸம்பர்க்  ஈ) ஐரோப்பிய மத்திய வங்கி

பிரிவு – 5 பெரு வினாக்கள்

48. அ. ஏகாதிபத்தியத்திற்கான காரணங்கள்

1. தொழிற்புரட்சி
   தொழிற்புரட்சியின் காரணமாக பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. பொருட்களை விற்க சந்தைகள் தேவைப்பட்டதால் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்தின.
2. தேசிய மயமாக்கல்
   தேசிய மயமாக்கப்பட்ட நாடுகள் தங்கள் பெருமையை நிலைநாட்ட வளர்ச்சி குன்றிய நாடுகளின் மீது ஆதிக்கம் செய்ய விரும்பின.
3. சமநிலை ஆதிக்கம்
   சமநிலை ஆதிக்கத்தை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை ஏற்படுத்தின.
4. புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு
   ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களை அடைய கண்டு பிடிக்கப்பட்ட புதிய வழித்தடங்கள் ஏகாதிபத்திய கொள்கையை ஊக்குவித்தன.
5. மக்கள் தொகைப் பெருக்கம்
   மக்கள் தொகைப் பெருக்கம், வேலையின்மை ஆகியவை ஏகாதிபத்தியத்தை துாண்டியது.

48. ஆ. இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்

1. உயிரிழப்பு
   சுமார் 50 மில்லியன் மக்கள் உயிரிழந்தனர்.
2. பொருள் சேதம்
   ஏராளமான பொருளாதார அழிவை ஏற்படுத்தியது.

3. ஜெர்மனியில் ஆட்சி மாற்றம்
ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவாலும், மேற்கு ஜெர்மனி பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா நாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டது.
4. ஆட்சி முடிவு
இத்தாலிலும், ஜெர்மனியிலும் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வரப்பட்டது.
5. ஜப்பானில் மாற்றம்
அமெரிக்கா ஜப்பானை கைப்பற்றியது.
6. பனிப்போர்
அமெரிக்காவும் ரஷ்யாவும் வல்லரசுகளாக மாறி பனிப்போர் துவங்கியது.
7. உலக அமைதிக்கு வித்து
1945ம் ஆண்டு உலக அமைதிக்காக ஐ.நா.சபை தோற்றுவிக்கப்பட்டது.
8. விடுதலை நாடுகள்
    1. இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, மலேசியா ஆகிய நாடுகள் பிரிட்டனிடமிருந்தும்
    2. பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிடமிருந்தும்
    3. இந்தோ-சீனா பிரான்சிடமிருந்தும்
    4. இந்தோனேஷியா டச்சுக்காரர்களிடமிருந்தும் விடுதலை பெற்றன.
9. கொள்கை கைவிடல்
    1. ஐரோப்பிய நாடுகள் குடியேற்றக் கொள்கை மற்றும்
    2. ஏகாதிபத்தியத்தை கைவிட்டன.

48. இ. ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள்

1. ஒற்றைச் சந்தை
    1. ஐரோப்பிய ஒன்றியம் நிலையான சட்டத்தின் மூலம் ஒற்றைச் சந்தை முறையை அமல்படுத்தி உள்ளது.
    2. வணிகக் கொள்கை, விவசாயக் கொள்கை, மீன் வளர்ப்பு மற்றும் பிரதேச வளர்ச்சிக் கொள்கையையும் பேணி வருகிறது.
2. பொதுவான வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கை
    1. ஐரோப்பிய ஒன்றியம் பிற நாடுகளுடன் உடன்படிக்கை செய்து வருகிறது.
    2. உலக வணிக அமைப்பு, ஜி 8, ஜி 20, ஐ.நா போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.
3. ஒற்றை நாணய முறை
    1. ஐரோப்பிய ஒன்றிய ஒற்றை நாணய முறை யூரோ எனப்படுகிறது.
    2. ஐரோப்பிய எல்லையை கடந்து வெளி நாடுகளில் தடையற்ற வணிகம் செய்கிறது.
4. ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கம்
    1. ஆறு நாடுகளுடன் தொடங்கப்பட்ட ஒன்றியம் இன்று 27 நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.
5. அறிவியல் ஆராய்ச்சி
    1. ஐரோப்பிய ஆராய்ச்சி ஆணையம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தனிப்பட்ட நாடுகளின் அறிவியல் ஆராய்ச்சி திட்டங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது.

49. அ. சார்க் அமைப்பு

1. தோற்றம்
   சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
2. அமைப்பு
   இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
3. பொது செயலாளர்
   இதன் முதல் பொதுச் செயலாளர் ஆஷான் ஆவார்.
4. உறுப்பு நாடுகள்
   இதில் எட்டு உறுப்பு நாடுகள் உள்ளன. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூடான், பங்களாதேஃ, இலங்கை, மாலத்தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான்.
5. செயல்பாடுகள்
   நாடுகள் தங்களுக்குள் போக்குவரத்து, கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை, கிராமபுனரமைப்பு மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல்.

49. ஆ. தேர்தல் முறை

1. தேர்தல் முறைகள்
   இந்தியாவில் குடிமக்கள் நேரடித் தேர்தல் அல்லது மறைமுகத் தேர்தல் மூலமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர்.
2. நேரடித் தேர்தல்
   1. குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை
   2. இந்தியாவில் சட்டமற் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது
3. மறைமுகத் தேர்தல்
   1. குடிமக்கள் தங்கள் வாக்குகளை செலுத்தாமல், தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு தேர்ந்தெடுக்கும் முறை
   2. இந்தியாவில் நாடாளுமன்ற மேல் சபை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர், துணை குடியரசு தலைவர் இம்முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
4. இடைத் தேர்தல்
   1. ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மரணமடைந்தாலோ, பதவியை விட்டு விலகினாலோ அந்தத் தொகுதியில் மட்டும் நடைபெறும் தேர்தல் இடைத் தேர்தல் எனப்படும்.
5. இடைப் பருவத் தேர்தல்.
   1. தேர்தல் பருவ காலமாக ஐந்து வருடங்களுக்குள் சில நேரங்களில் பாராளுமன்றமோ அல்லது மாநில சட்டசபைகளோ தக்க காரணத்தால், இடையில் கலைக்கப்பட்டால் மீண்டும் அவற்றிற்கு தேர்தல் நடந்தால் இடைப்பருவத் தேர்தல் எனப்படும்.

49. ஆ. ஜனநாயகத்தில் எதிர்கட்சியின் பங்கு

1. லோக்சபாவில் ஆளுங்கட்சிக்கு அடுத்தப்படியாக இடங்களை பெறும் கட்சி அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சியாகும்.
2. எதிர் கட்சி தலைவர் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரங்களை பெற்றுள்ளார்.
3. ஆளும் கட்சியின் செயல்பாடுகளை கண்காணிப்பது எதிர்கட்சியின் முக்கிய பணியாகும்.

4. ஆளும் கட்சியின் கொள்கைகளை வெளிப்படையாக விமர்சிக்க உரிமை உண்டு.
5. அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்து கொள்ள முழு உரிமை உண்டு.
6. தவறான முறையில் அதிகாரங்களை பயன்படுத்துவதை தடுக்கும் தடைக்கற்களாக எதிர்கட்சிகள் இயங்குகின்றன.
7. மக்களாட்சியின் வெற்றி என்பது எதிர்க்கட்சியின் செயல்பாட்டை ஒட்டியே அமைகிறது.
8. ஜனநாயகத்தில் எதிர்கட்சியின் பங்கு மிக முக்கியமாகதாக உள்ளது.

50. அ. வேற்றுமையில் ஒற்றுமை

1. இந்தியா உயர்ந்த மலைகளையும் தாழ்ந்த சமவெளிகளையும் கொண்டுள்ளது.
2. மாறுப்பட்டகாலநிலையை கொண்டுள்ளது
3. அடர்ந்த வெப்ப மண்டல காடுகளும், பாலைவன புதர்களும் பரவிக் காணப்படுகின்றன.
4. பல்வேறு வகையான தாவரங்களும், விலங்குகளும் காணப்படுகின்றன.
5. இந்திய மக்கள் பல மதங்களை பின்பற்றி வாழ்கின்றன.

50. ஆ. இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம்

1. வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் சூழியல் சமநிலையை பாராமரிக்க வேண்டும்.
2. பல்வகை உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டும்
3. தற்காலத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வளங்கள் கிடைப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும்.
4. மனித இனம் தொடர்ந்து வாழ்வதற்கு உறுதி அளித்திட வேண்டும்.
5. தொடர்ந்து எடுப்பதால் செலவாகும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

50. இ. மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்க காரணம் என்ன?

1. துறைமுகம், ஏற்றுமதிக்கு உதவியாக உள்ளது.
2. போக்குவரத்து வசதி,
3. ஈரப்பதம் மிக்க காலநிலை.
4. மூலதனப்பொருட்கள், நிதிவசதி, எளிதாக கிடைக்கிறது.
5. பணியாட்கள் அதிகமாக கிடைக்கின்றனர்.

51. அ. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்

1. உற்பத்தி முறை
2. வருமான முறை
3. செலவின் முறை

1. உற்பத்தி முறை
   நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பை கணக்கிடுதல்.
2. வருமானமுறை
   நாட்டிலுள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுதல்.
3. செலவின முறை

மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு, முதலீடு, சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் கணக்கிடுதல்.

51. இ. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம்

1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையை கணக்கிட
2. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறிய
3. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கையும் வேகத்தையும் மற்றும் முந்தைய ஆண்டுகள் மற்றும் மற்ற நாடுகளின் நாட்டு வருமானத்தை ஒப்பிட்டு பார்க்கவும்
4. நாட்டு வருமானத்தில் முதன்மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் பணிகள் துறை பங்களிப்பின் அமைப்பையும் அறிய
5. பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டி அரசு கொள்கைகளை வகுக்க திட்டமிட பயன்படுகிறது.

51. ஆ. நலம் நாடும் அரசின் பணிகள்

1. ஒரு நாட்டின் நலம் நாடும் அரசு மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் வகையில் கீழ்கண்ட பணிகளை செய்ய வேண்டும்.

2. பாதுகாப்பு பணிகள் :
மக்களை அந்நிய நாட்டு படையெடுப்பு மற்றும் உள்நாட்டு கலவரங்களில் இருந்து பாதுகாப்பது மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது.

3. நிர்வாகப் பணிகள் :
மக்கள் பணியாற்றுவாற்கு சட்ட மன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாக செயல்படுகிறது.

4. சமூக பாதுகாப்பு பணிகள் :
அரசானது சமூக பாதுகாப்பு பணிகளாக ஏழைகள், உடல் நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.

5. பொருளாதார பணிகள் :
வேளாண்மை, வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.

52. காலக்கோடு – 1915 – 1945

1. 1916 - ஜூட்லாண்டு போர்
2. 1917 - இரஷ்யாவில் அக்டோபர் புரட்சி
3. 1918 - முதல் உலகப் போர் முடிவு
4. 1919 - பாரீஸ் மாநாடு
5. 1920 - சர்வதேச சங்கம் தோற்றம்
6. 1922 - முசோலினி அதிகாரத்தை கைப்பற்றுதல்
7. 1929 - அமெரிக்காவில் பெருமந்தம் ஆரம்பம்
8. 1933 - ஹிட்லர் ஜெர்மனியின் சான்சலராதல்
9. 1934 - ஹிட்லர் குடியரசு தலைவராதல்
10. 1936 - முசோலினி எத்தியோப்பியாவை கைப்பற்றுதல்
11. 1937 - முசோலினி சர்வதேச சங்கத்தில் இருந்து வெளியேறல்
12. 1939 - இரண்டாம் உலகப் போர் ஆரம்பம்
13. 1940 - அமெரிக்காவில் பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பல்
14. 1941 - ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தல்
15. 1945 - இரண்டாம் உலகப் போர் முடிவு

53. அ.




53. ஆ.



**54.**


54.
இந்தியா
காரக்கோரம்
கே-2 சிகரம்
தார் பாலைவனம்
200 செ.மீ மேல் மழை பெறும் பகுதி
கங்கை ஆறு
பொக்காரோ
சுந்தரவனம்
காம்பே வளைகுடா
சேலம்
நெய்வேலி
பாக் நீர் சந்தி
அந்தமான் நிக்கோபார் தீவுகள்